**குருணாகல் பிரதேச சபை - 2021**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

----------------------------------------------------

குருணாகல் பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குருணாகல் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) நகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய சபையின் நிதியறிக்கை முன்னைய வருடத்துடன் ஒப்பிடப்படும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாட்டின் பிரகாரம் 1.6.1 (அ) பந்தியின் பரிந்துரைகள் தவிர சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளன.

## 1.6. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய வருடத்தின் நிதிக் கூற்றுக் கணக்காய்வின் போது கணக்கீட்டுக் குறைபாடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த 06 கட்டடங்களின் மூலதனச் செலவினமான ரூபா 6,051,334 தொகை மூலதனப்படுத்தப்படாமை மீளாய்வாண்டிலும் சீர் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்று மூலம் சீர் செய்வேன் என்பதைக் குறிப்பிடுகின்றேன். | சரியான கணக்குகள் பேணப்படல் வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய கட்டட அபிவிருத்திக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 33,525,755 மற்றும் உபகரணக் கொள்வனவு ரூபா 5,618,844 மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை | | |

| | | |
|---|---|---|
| (இ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று சபைக்குச் சொந்தமான ரூபா 49,113,750 பெறுமதியான 13 காணிகள் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத 09 காணிகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.<br><br>(ஈ) மீளாய்வாண்டில் செயற்படுத்தப்படாதிருந்த ரூபா 17,029,606 பெறுமதியான 13 அபிவிருத்தித் திட்டங்கள் கணக்கிடப்பட்டிருந்தமை காரணமாக மூலதனச் செலவுகள் மற்றும் வியாபாரக் கடன் கொடுத்தோர் அத் தொகையினால் கணக்குகளில் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.<br><br>(உ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் மீதி ரூபா 4,388,051 ஆகவிருந்த போதும், ரூபா 5,501,093 என ரூபா 1,113,042 கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்று மூலம் சீர் செய்வேன் என்பதைக் குறிப்பிடுகின்றேன். | சரியான கணக்குகள் பேணப்படல் வேண்டும் |
| (ஊ) மீளாய்வாண்டில் 03 வருமானத் தலைப்புகளுக்கான வருமானம் ரூபா 36,239,357 கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.<br><br>(எ) மீளாய்வாண்டில் 06 வருமானத் தலைப்புகளுக்கான வருமானம் ரூபா 2,843,998 குறைவாகவும் போக்குவரத்து தொடர்புகள் மற்றும் ஏனைய சேவைகளுக்கான செலவு ரூபா 177,000 குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.<br><br>(ஏ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதியன்று நிலுவையாகவிருந்த நிலையான வைப்புக்கான வட்டி வருமானம் ரூபா 813,853 ஆகவிருந்த போதும் கணக்குகளில் ரூபா 477,458 என ரூபா 336,395 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்று மூலம் சீர் செய்வேன் என்பதைக் குறிப்பிடுகின்றேன். | சரியான கணக்குகள் பேணப்படல் வேண்டும |

### 1.6.2 இணக்கங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று சபையின் மூலம் 02 வெளி நபர்களுக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டு அதற்காக ரூபா 55,195 வழக்குக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், சபைக்கு எதிராக 04 வெளி நபர்களால் தொடுக்கப்பட்டிருந்த வழக்குகளுக்காக ரூபா 494,140 செலவிடப்பட்டிருந்த போதும், நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | வழக்கறிஞர்களுக்கான கட்டணச் செலவு வேறு சேவைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | நிகழத்தக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்படல் வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 291,909 பெறுமதியான வரவு மீதியுடனான தொங்கல் கணக்கொன்றும் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்று மூலம் சீர் செய்வேன். | தோங்கல் கணக்குகள் கண்டறியப்பட்டு சீர் செய்யப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் 126 (ஊ) பிரிவு | சபையின் எல்லைப் பிரதேசத்தினுள் பொறுத்தப்பட்டிருந்த 6 விளம்பரப் பதாதைகள் மூலம் ரூபா 385,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் குறிப்பிடப்பட்டிருந்ததற் கமைவாக சபையின் எல்லைப் பிரதேசத்தினுள் பொறுத்தப்பட்டிருந்த 06 விளம்பரப் பதாதைகளுக்கான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில் லை. | சகல விளம்பரப் பதாதைகளும் வருட ஆரம்பத்தில் ஆய்வு செய்யப்பட்டு கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2015 நவம்பர் 02ஆம் திகதிய 2015/1 இலக்க வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 03 (v) உப பிரிவு | மருத்துவ உதவிக்கான உச்சமட்ட கொடுப்பனவு எல்லை ரூபா 25,000 ஆக இருந்த போதும், அதனை மீறி 02 நபர்களுக்கு ரூபா 1,068,928 கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது | நிதிக் குழுவின் அனுமதி மற்றும் கௌரவ ஆளுனர் அவர்களின் அனுமதியுடன் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்கமைவாக செயற்படல் வேண்டும். |
| | 3(I) பிரிவு | விகாரையொன்றின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக நிதி வழங்க முடியுமான உச்சமட்ட எல்லை ரூபா 20,000 ஆக இருந்த போதும், அதை மீறி ரூபா 500,000 நிதி வழங்கப்பட்டிருந்தது. நிதி வழங்கப்படுவதற்கு முன்னர் சபையின் தொழில்நுட்ப அதிகாரி மூலம் வரவு செலவு விபரம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் , நிதி வழங்கப்பட்டதன் பின்னர் குறித்த வேலை முறையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றிய மதிப்பீடும் செய்யப்படவில்லை. | கணக்காய்வில் குறிப்பிடப்பட்டிருந்ததற்கமைவாக தொழில்நுட்ப அதிகாரியின் அறிக்கை பெறப்பட்டு அம் மேற்பார்வையின் கீழ் நிதி வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுகிறேன். | சுற்றறிக்கை எல்லைகளை மீறி நிதி வழங்கக் கூடாத அதேவேளை நிதி வழங்கப்பட்டதன் பின்னர் குறித்த வேலை முறையாக நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான பின்னூட்டல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 153,025,836 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 147,319,946 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் ஈட்டலின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆந் திகதியன்று 8,981 வீதவரிக் கூறுகளின் மூலம் ரூபா 9,503,995 | எதிர்காலத்தில் நிலுவை வருமான தொகைகளை அறவிடுவது தொடர்பில் | நிலுவை தொகைகளை அறவிடுவதற்கான செயல்முறைகளை |

| | | |
|---|---|---|
| தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேலும் செயற்படுவதாக கணக்காய்விற்கு அறியத்தருகிறேன். | பயன்படுத்தி நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஹெல்கமவத்த ஏலவிற்பனையில் பொதுப் பயன்பாட்டிற்காக 03 ஏக்கர் 2 ரூட் 20.1 பர்சஸ் பரப்புள்ள காணி கிடைக்க வேண்டியிருந்த போதும், பொதுப் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட காணியைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் வேறாக்கப்பட்டிருக்கவில்லை. இக் காணிக்கான அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் அதாவது பாதை, காண் மற்றும் குழாய் அமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு துண்டுகளாக பிரிக்கப்படுவதற்கான அனுமதி பெறப்பட வேண்டியிருந்த போதும், அவ்வாறு செய்யப்படாது காணித் துண்டுகள் விற்பனை செய்யப்பட்டு வருவதை கணக்காய்வின் போது அவதானிக்க முடிந்தது. | இச் சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பமுனாவல கிராம அதிகாரி பிரிவானது நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பிரதேசமாக இருப்பதனால் இத் திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது நகர அபிவிருத்தி அதிகார சபை திட்டமிடல் குழுவின் அனுமதியின் பிரகாரம் திட்டத்தின் சகல குறைபாடுகளும் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் இணக்கச் சான்றிதழை வழங்கும் அடிப்படையிலாகும் என்பதை குறிப்பிடுகிறேன். | சகல பொது வசதிகளும் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் காணியை ஏலத்தில் விடுவதற்கான இணக்கச் சான்றிதழை வழங்கி காணித் துண்டுகளை விற்பனை செய்வதற்கான அனுமதி வழங்கப்படல் வேண்டும். |
| (ஆ) காணி துண்டாக்கப்படும் பொழுது திட்டமொன்றிற்கான அனுமதி பெறப்படாது கஹடபிடிய மானெல்வத்த காணியொன்று துண்டு பிரிக்கப்பட்டிருந்தது. பிரதான வீதியை அண்டியிருந்த இக் காணியை அபிவிருத்தி | சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் சட்ட விரோத காணி துண்டாக்கல் தொடர்பாக ஆராய்ந்து சட்டரீதியான அனுமதியைப் பெற்று ஏலவிற்பனை செய்யுமாறு ஏலவிற்பனை | அனுமதி பெறப்பட்டு காணி துண்டாக்கம் செய்யப்படல் வேண்டும். 01 வீத விற்பனை வரி வருமானம் முறையாக அறவிடப்படல் |

| | | |
|---|---|---|
| செய்வது தொடர்பாக பிரதேச சபை அதிகாரிகளின் கவனம் செலுத்தப்படாமையானது பொறுப்பற்ற செயலாகும் என அவதானிக்கப்பட்டது. 2022 ஏப்ரல் 06 ஆகிய ஆய்வுத் தினமாகும் பொழுது இக் காணியின் 08 துண்டுகள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. இக் காணியை துண்டு பிரித்தலின் 1 வீத வருமானமாகிய சுமார் ரூபா 2,066,568 தொகையினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களுக்கு அறிவிக்குமாறு தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த நிறுவனங்களுக்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான விண்ணப்பங்களை இச் சபைக்கு கையளிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

## 3.2 சர்ச்சைக்குரிய தனமையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விகாரையொன்றிற்கான புதிய மேசை மற்றும் கதிரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 200,000 இற்கான காசோலையொன்று 2021 ஆகஸ்ட் மாதம் வழங்கப்பட்டிருந்த போதும் 2022 ஏப்ரல் 7 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனையின் போது அறநெறிப் பாடசாலைக்காக இக் கதிரை மேசைகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதும் அறநெறிப் பாடசாலையில் பழைய கதிரை மேசைகளே காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. | விகாரையின் நிருவாக சபையினால் 2021.02.02 ஆம் திகதி அறநெறிப் பாடசாலைக்கான கதிரை மற்றும் மேசைகள தயாரித்துக்கொள்வதற்கான நிதியைப் பெற்றுத் தருமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோல் 2021.02.02 அன்று நடைபெற்ற நிதி மற்றும் கொள்கைக் குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ரூபா 200,000 நிதித் தொகை ஆளுனரின் அனுமதியின் பிரகாரம் பெற்றுக்கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | காசோலை வழங்கப்பட்ட போதும் கதிரை மேசைகள் கொள்வனவு செய்யப்படவில்லை. குறித்த செயற்பாடு நிறைவேற்றப்பட்டமை தொடர்பான பின்னூட்டல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |